# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## காவல் துறை

மானியக் கோரிக்கை எண். 22

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

மானியக் கோரிக்கை எண். 23

# அறிவிப்புகள்

# 2024–2025

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# காவல் துறை
# மானியக் கோரிக்கை எண். 22

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை
## மானியக் கோரிக்கை எண். 23

## அறிவிப்புகள்
## 2024 – 2025

# மு.க. ஸ்டாலின்
## முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

# காவல் துறை

## I. புதிய காவல் நிலையங்கள், உட்கோட்டங்கள், பிரிவுகள் உருவாக்குதல் / மறுவரையறை செய்தல்.

**1) தாம்பரம் காவல் ஆணையரகத்தில் உள்ள சி–3 மணிமங்கலம் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து படப்பை காவல் நிலையம் புதிதாக உருவாக்குதல்.**

தாம்பரம் காவல் ஆணையரகத்தில் உள்ள மணிமங்கலம் பகுதி கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் கொண்ட வளர்ந்து வரும் பகுதியாக இருப்பதால் சட்டம் & ஒழுங்கை பராமரிக்கவும், குற்ற நிகழ்வுகளைத் தடுக்கவும், போக்கிரிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், சி– 3 மணிமங்கலம் காவல் நிலையத்தை இரண்டாக பிரித்து புதிதாக படப்பை காவல் நிலையம் ரூபாய் 1.70 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**2) மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் கோவிலுக்கென புதிய காவல் நிலையம் உருவாக்குதல்.**

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து புதிதாக திருப்பரங்குன்றம் கோவிலுக்கென காவல் நிலையம் உருவாக்கப்படும்.

**3) திருவண்ணாமலை மாவட்டம் ஆதமங்கலம்புதூரில் புதிய காவல் நிலையம் உருவாக்குதல்.**

திருவண்ணாமலை மாவட்டம் கடலாடி காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து ஆதமங்கலம்புதூரில் புதிய காவல் நிலையம் உருவாக்கப்படும்.

**4) சென்னை பெருநகர காவல்துறையில் கொளத்தூர் சரகத்தில் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் புதிதாக உருவாக்குதல்.**

சென்னை பெருநகர காவல் சரகம் ஒவ்வொன்றிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்கப்படுவதை உறுதி செய்யும் வகையிலும், ஒரு மாநகராட்சி மண்டலம் மற்றும் 9 வார்டுகளுடன் அதிக மக்கள் தொகை கொண்ட சரகமாக கொளத்தூர் சரகம் இருப்பதாலும் அங்கு ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் ரூபாய் 0.37 கோடி செலவில் புதிதாக உருவாக்கப்படும்.

**5) தாம்பரம் காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட கேளம்பாக்கம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட செங்குன்றம் (Red Hills) ஆகிய இரண்டு இடங்களில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் புதிதாக உருவாக்குதல்.**

தாம்பரம் காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட கேளம்பாக்கம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட செங்குன்றம் ஆகிய சரகங்களில் இரண்டு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ரூபாய் 0.73 கோடி செலவில் புதிதாக உருவாக்கப்படும்.

**6) தாம்பரம் காவல் ஆணையரகத்தில் உள்ள கிளாம்பாக்கத்தில் போக்குவரத்து காவல் நிலையம் புதிதாக உருவாக்குதல்.**

கிளாம்பாக்கத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து தமிழ்நாட்டின் தென் பகுதிகளில் உள்ள மாநகரங்களுக்கும், நகரங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்படுவதால் கிளாம்பாக்கத்தில் போக்குவரத்து காவல் நிலையம் ரூபாய் 2.53 கோடி செலவில் புதிதாக உருவாக்கப்படும்.

**7) சேலம் மாவட்டத்தில் ஏற்காடு போக்குவரத்து காவல் நிலையம் புதிதாக உருவாக்குதல்.**

சேலம் மாவட்டம் ஏற்காட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வாகனங்களில் வருவதால் வாகன நெரிசல் மற்றும் விபத்துகள் ஏற்படுகிறது. ஆகையால், அங்கு போக்குவரத்து காவல் நிலையம் புதிதாக ரூபாய் 0.70 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**8) ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரகங்களில் புதிதாக சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவு உருவாக்குதல்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் உரிமைகளை உறுதி செய்யவும், அவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வழங்கவும், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யவும், ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரகங்களில் புதிதாக சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவு, ரூபாய் 1.91 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**9) ஆவடி காவல் ஆணையரகத்தில் " Q " பிரிவின் அலகு புதிதாக உருவாக்குதல்.**

சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்திலிருந்து ஆவடி காவல் ஆணையரகம் சமீபத்தில் பிரிக்கப்பட்டதால் அங்கே "Q" பிரிவின் அலகு ரூபாய் 0.89 கோடி செலவில் புதிதாக உருவாக்கப்படும்.

**10) சென்னை பெருநகர காவல் துறையில் போக்குவரத்து அமலாக்கம் மற்றும் புலனாய்வு பிரிவிற்காக மாவட்டங்கள் மற்றும் சரகங்கள் மறுசீரமைக்கப்பட்டு புதிய மாவட்டங்கள் மற்றும் சரகங்கள் உருவாக்குதல்.**

சென்னை பெருநகர காவல்துறை மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளதால், பொது மக்களின் கோரிக்கைகளை விரைந்து பரிசீலிக்கவும், முக்கிய நிகழ்வுகளின் போதும், சட்டம் & ஒழுங்கு மற்றும் போக்குவரத்துக் காவல் இடையே சிறந்த ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தவும், தற்போதைய சென்னை பெருநகர போக்குவரத்துக் காவல் எல்லைகள் மறுசீரமைக்கப்படும்.

**11) ஆவடி காவல் ஆணையரகத்தில் புதிதாக பொன்னேரி சரகம் உருவாக்குதல்.**

ஆவடி காவல் ஆணையரகத்தில், பொன்னேரி மிகப் பெரிய பகுதியாக இருப்பதால் அங்கு சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், குற்ற நிகழ்வுகள் மற்றும் அசம்பாவித சம்பவங்களைத் தடுக்கவும் பொன்னேரி, திருப்பாலைவனம், காட்டூர் காவல் நிலையங்கள் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம், பொன்னேரி ஆகியவற்றை உள்ளடக்கிய பொன்னேரி சரகம் புதிதாக ரூபாய் 0.41 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**12) காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் சிறப்பு புலனாய்வுப் பிரிவிற்கென மூன்று அலகுகள் புதிதாக உருவாக்குதல்.**

மத அடிப்படைவாதம் குறித்த சவால்களை சிறப்பு பிரிவு எதிர்கொள்ளும் வகையில் காஞ்சிபுரம், விழுப்புரம், சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களில் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் மூன்று அலகுகள் ரூபாய் 2.38 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**13) கள்ளக்குறிச்சி மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வு துறையின் இரண்டு அலகுகள் புதிதாக உருவாக்குதல்.**

விழுப்புரம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, கள்ளக்குறிச்சி மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதால், அங்கே தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை தொடர்புடைய பணிகளை மேற்கொள்ள இந்த மாவட்டங்களில் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வு துறையின் அலகுகள் ரூபாய் 2.01 கோடி செலவில் புதிதாக உருவாக்கப்படும்.

**14) அரியலூர் மாவட்டம் மற்றும் சேலம், திருச்சி, திருப்பூர், திருநெல்வேலி உள்ளிட்ட மாநகரங்களில் காவல் சுருக்கெழுத்துக் கூட அலகுகள் புதிதாக உருவாக்குதல்.**

அரியலூர் மாவட்டம், சேலம், திருச்சி, திருப்பூர் மற்றும் திருநெல்வேலி மாநகரங்கள் உருவாக்கப்பட்டபோது காவல் சுருக்கெழுத்துக் கூட அலகுகள் உருவாக்கப்படவில்லை. ஆகையால் இவ்விடங்களில் காவல் சுருக்கெழுத்துக் கூட அலகுகள் ரூபாய் 1.93 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**15) திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள, பொன்னேரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தினை ஆவடி காவல் ஆணையரகத்தின் கீழ் கொண்டு வருதல்.**

பொன்னேரி உட்கோட்டத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு ஆவடி காவல் ஆணையரகத்தின் கீழ் உள்ளது. தற்போது பொன்னேரி அனைத்து மகளிர் காவல் நிலையம் திருவள்ளூர் மாவட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதனை, ஆவடி காவல் ஆணையரகத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

**16) திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பொன்னேரி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினை ஆவடி காவல் ஆணையரகத்தின் கீழ் கொண்டு வருதல்.**

பொன்னேரி உட்கோட்டத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு ஆவடி காவல் ஆணையரகத்தின் கீழ் உள்ளது. தற்போது பொன்னேரி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு திருவள்ளூர் மாவட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதனை, ஆவடி காவல் ஆணையரகத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

**17) குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை காவல் கண்காணிப்பாளர் பதவிகள் பெயர் மாற்றம் செய்யப்படுதல் மற்றும் அவர்களது காவல் எல்லைகளை மாற்றியமைத்தல்.**

தற்போதைய காவல் கண்காணிப்பாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை–I இன் பதவி காவல் கண்காணிப்பாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (வடக்கு மண்டலம்) எனவும், காவல் கண்காணிப்பாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை–II இன் பதவி காவல் கண்காணிப்பாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (தெற்கு மண்டலம்) எனவும், காவல் கண்காணிப்பாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை–III இன் பதவி காவல் கண்காணிப்பாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (மத்திய மண்டலம்) எனவும், காவல் கண்காணிப்பாளர், இணையவழி குற்றம் பதவி காவல் கண்காணிப்பாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (மேற்கு மண்டலம் மற்றும் இணையவழி குற்றப் பிரிவு) எனவும் பெயர் மாற்றம் செய்யப்படும்.

**18) பொருளாதார குற்றவாளிகளை குண்டர் சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வருவதற்கு 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 14 – ல் திருத்தம் செய்தல்.**

பொருளாதார குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் பொருளாதார குற்றவழக்கு குற்றவாளிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த பொருளாதார குற்ற வழக்கு குற்றவாளிகள் குண்டர் சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வரப்படுவர். இதற்கென 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 14–ல் திருத்தம் செய்யப்படும்.

**19) சென்னை பெருநகர காவலில் உள்ள கிண்டி காவல் நிலைய கட்டுப்பாட்டில் அமைந்துள்ள டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு சிறப்பு மருத்துவமனைக்கு புறக்காவல் நிலையம் ஒன்று அமைத்தல்.**

சென்னை பெருநகர காவலில் உள்ள கிண்டி காவல் நிலைய கட்டுப்பாட்டில் அமைந்துள்ள டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு சிறப்பு மருத்துவமனைக்கு புறக்காவல் நிலையம் ரூபாய் 0.23 கோடி செலவில் அமைக்கப்படும்.

## II. புதிய கட்டடங்கள் கட்டுதல் / பழைய கட்டடங்கள் பழுதுபார்த்தல்.

**20) சென்னை பெருநகர காவல் கொத்தவால்சாவடி காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

சென்னை மாநகரம், கொத்தவால்சாவடி காவல் நிலையம் மாநகராட்சி பள்ளிக் கட்டடத்தில் 2021-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு ரூபாய் 3.99 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**21) காஞ்சிபுரம் மாவட்டம் விஷ்ணுகாஞ்சி காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

தற்போதுள்ள விஷ்ணுகாஞ்சி காவல் நிலையம் 1928-ல் கட்டப்பட்ட பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் ரூபாய் 1.48 கோடி செலவில் கட்டப்படும்.

**22) திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடியில் புதிய காவல் நிலைய கட்டடம் கட்டுதல்.**

திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடியில் உள்ள காவல் நிலையம் 1984 ஆம் ஆண்டு முதல் பழைய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் ரூபாய் 1.83 கோடி செலவில் கட்டப்படும்.

**23) திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூரில் 1995ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் ஊரக காவல் நிலையம் பழைய கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் ரூபாய் 1.30 கோடி செலவில் கட்டப்படும்.

**24) கோயம்புத்தூர் மாவட்டம் சுல்தான் பேட்டை காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

கோயம்புத்தூர் மாவட்டம், சுல்தான் பேட்டை காவல் நிலையம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு சூலூர் தாலுகா, வாராப்பட்டி கிராமத்தில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**25) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் உட்கோட்டத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

**26) திருச்சி மாவட்டம், மணப்பாறையில் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் அனைத்து மகளிர் காவல் நிலையம் பிற துறையின் கட்டடத்தில் 2004 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இம்மகளிர் காவல் நிலையத்திற்கு ரூபாய் 2.17 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**27) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம், V6 கொளத்தூர் காவல் நிலையம் மற்றும் K5 பெரவள்ளூர் காவல் நிலையம் ஆகியவற்றிற்கு புதிதாக ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுதல்.**

கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம், V6 கொளத்தூர் காவல் நிலையம் மற்றும் K5 பெரவள்ளூர் காவல் நிலையம் ஆகியவற்றிற்கு புதிதாக ஒருங்கிணைந்த கட்டடம் ரூபாய் 5.00 கோடி செலவில் கட்டப்படும்.

**28) தாம்பரம் காவல் ஆணையரகத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

சமீபத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தாம்பரம் காவல் ஆணையரகம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் ஆணையரகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

**29) காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் புதிய கட்டடம் கட்டுதல்.**

காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் புதிய பிரிவுகளுக்கு இட வசதி தேவைப்படுவதால் புதிய கட்டடம் கட்டப்படும்.

**30) சென்னை இராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள மருதம் வளாகத்தில் பாதுகாப்பு பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்காக கட்டுப்பாட்டு அறை கட்டடம் புதிதாகக் கட்டுதல்.**

சென்னை இராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள மருதம் வளாகத்தில் பாதுகாப்பு பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் கட்டுப்பாட்டு அறை பழுதடைந்துள்ளதால் அதற்கு பதிலாக, புதிதாகக் கட்டுப்பாட்டு அறை கட்டடம் ரூபாய் 1.13 கோடி செலவில் கட்டப்படும்.

**31) இராமநாதபுரம் மாவட்டம், "Q" பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

இராமநாதபுரம் மாவட்டம், "Q" பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ரூபாய் 1.58 கோடி செலவில் கட்டப்படும்.

**32) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் 222 காவலர் குடியிருப்புகள் புதிதாக கட்டுதல்.**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் பழுதடைந்த நிலையில் உள்ள 254 காவலர் குடியிருப்புகளுக்கு பதிலாக 222 காவலர் குடியிருப்புகள் ரூபாய் 76.69 கோடி செலவில் புதிதாக கட்டப்படும்.

**33) திருப்பூர் மாவட்டம், நல்லூரில் இருப்புப் பாதை காவல் ஆளிநர்களுக்கு புதிதாக 17 காவலர் குடியிருப்புகள் கட்டுதல்.**

திருப்பூர் மாவட்டம், நல்லூரில் இருப்புப் பாதை காவல் ஆளிநர்களுக்கென 17 காவலர் குடியிருப்புகள் ரூபாய் 3.86 கோடி செலவில் புதிதாக கட்டப்படும்.

**34) தமிழ்நாடு காவலர்களுக்காக உருவாக்கப்பட்ட காவலர் அங்காடிகளில் 12 காவலர் அங்காடிகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டுதல்.**

காவலர் அங்காடிகளை விரிவுபடுத்தி, மேம்படுத்திட, 12 மாவட்டங்கள் / நகரங்களில் புதியதாக தலா ஒரு காவலர் அங்காடி கட்டடம் கட்டப்படும்.

**35) பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்கள் மற்றும் குற்றப்பிரிவில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் வைத்திட சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களில் புதிய கிடங்கு (Malkhana) அமைத்தல்.**

வழக்கு விசாரணையின்போது பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்கள் மற்றும் குற்றப்பிரிவில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் வைத்திட சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களில் புதிய கிடங்கு (Malkhana) ரூபாய் 3.84 கோடி செலவில் அமைக்கப்படும்.

**36) சென்னை பெருநகரம், இராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் சிந்தெடிக் ஓடுதளம், உயரம் தாண்டுதல் மற்றும் எறிதல் உள்ளிட்ட போட்டிகள் நடத்த நவீன விளையாட்டு கட்டமைப்புகள் ஏற்படுத்துதல்.**

சென்னை பெருநகரம், இராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள் மற்றும் விளையாட்டு அமைப்புகள் சார்பாக தடகள விளையாட்டு போட்டிகள் நடத்தப்படுகின்றன. மேலும் இங்கு காவலர்களின் அணிவகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இம்மைதானத்தை மேம்படுத்திட நவீன கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

**37) சென்னை பெருநகரம், புதுப்பேட்டை ஆயுதப்படை வளாகத்தில் உள்ள இராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் விழா மேடை மற்றும் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல்.**

சென்னை பெருநகரம், புதுப்பேட்டை ஆயுதப்படை வளாகத்தில் அமைந்துள்ள இராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் சுற்றுச்சுவர் மற்றும் விழா மேடை ரூபாய் 1.47 கோடி செலவில் கட்டப்படும்.

**38) சிறப்பு பழுதுபார்ப்பு பணிகளுக்காக வழங்கப்படும் நிதி ரூபாய் 40 கோடியிலிருந்து ரூபாய் 50 கோடியாக உயர்த்துதல்.**

காவல்துறைக்கென கட்டப்படும் கட்டடங்களின் எண்ணிக்கை வருடந்தோறும் அதிகமாகிக் கொண்டே இருப்பதால், கட்டடங்கள் / குடியிருப்புகள் ஆகியவற்றின் சிறப்பு பழுது பார்ப்பு பணிகளுக்காக வழங்கப்படும் நிதி ரூபாய் 40 கோடியிலிருந்து ரூபாய் 50 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

## III. புதிய காவல் வாகனங்கள் வாங்குதல்

**39) 300 புதிய ஈப்புகள் வழங்குதல்.**

காவல்துறையின் பயன்பாட்டிற்கென 300 புதிய ஈப்புகள் ரூபாய் 31.50 கோடி செலவில் வழங்கப்படும்.

**40) பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு பணிகளுக்காக 25 புதிய வேன்கள் வழங்குதல்.**

பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு பணிகளுக்கு ஆளிநர்களை திரட்டவும், அழைத்துச் செல்லவும், வேன்கள் தேவைப்படுகின்றன. இந்த ஆண்டு 25 புதிய வேன்கள் ரூபாய் 5.25 கோடி செலவில் வழங்கப்படும்.

**41) பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு பணிகளுக்காக 15 புதிய பேருந்துகள் வழங்குதல்.**

பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு பணிகளுக்கும், ஆளிநர்களை திரட்டவும், அழைத்துச் செல்லவும் பேருந்துகள் அவசியமாக தேவைப்படுகின்றன. இந்த ஆண்டு 15 புதிய பேருந்துகள் ரூபாய் 4.5 கோடி செலவில் வழங்கப்படும்.

**42) 500 புதிய இரு சக்கர வாகனங்கள் வழங்குதல்.**

காவல் துறை பணியாளர்களின் பயன்பாட்டிற்கென 500 புதிய இரு சக்கர வாகனங்கள் ரூபாய் 5.50 கோடி செலவில் வழங்கப்படும்.

**43) கலவரத் தடுப்புப் பணிக்காக சிறப்பு வாகனங்கள் வழங்குதல்.**

மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களில் கலவரத் தடுப்புப் பணிக்காக 5 நவீன வஜ்ரா (Vajra) வாகனங்கள் மற்றும் 2 நவீன வருண் (Varun) வாகனங்கள் மாவட்டங்கள் / மாநகரங்களுக்கு வழங்கப்படும்.

இது தவிர சென்னை பெருநகர காவல் பணிக்கென, 1 நவீன வஜ்ரா (Vajra) வாகனம் மற்றும் 2 நவீன வருண் (Varun) வாகனங்கள் மொத்தம் ரூபாய் 4.31 கோடி செலவில் வழங்கப்படும்.

**44) சென்னை மாநகரில் விதிமுறைகளை மீறி நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கென நான்கு நவீன ரக மீட்பு (Wrecker) வாகனங்கள் வழங்குதல்.**

சென்னை மாநகரில் விதிமுறைகளை மீறி நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கென நான்கு நவீன ரக மீட்பு (Wrecker) வாகனங்கள் ரூபாய் 2.06 கோடி செலவில் வழங்கப்படும்.

**45) சென்னை பெருநகர காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் விபத்துக்களை குறைக்கவும், உயிரிழப்புகளை தடுக்கவும் வீரா (VEERA) என்கிற பிரத்யேக மீட்பு மற்றும் நிவாரண வாகனம் வழங்குதல்.**

சாலை விபத்துக்களின்போது நிகழ்விடத்திற்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடவும், காயமடைந்தவர்களுக்கு விரைந்து மருத்துவ உதவி அளிக்கவும், போக்குவரத்து இடையூறுகளை களையவும், வீரா (VEERA) என்கிற பிரத்யேக மீட்பு மற்றும் நிவாரண வாகனம் ரூபாய் 0.73 கோடி செலவில் வழங்கப்படும்.

**46) சென்னை பெருநகர காவல் துறையின் சாலைத் தடுப்பான்களை (Barricades) எடுத்து செல்வதற்கு 15 சிறப்பு வாகனங்கள் வழங்குதல்.**

சென்னை பெருநகர காவல்துறையில் அவ்வப்போது நடைபெறும் பொது நிகழ்ச்சிகள், போக்குவரத்து மாற்றங்கள் உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளின்போது சாலைத் தடுப்பான்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்காக 15 சிறப்பு வாகனங்கள் ரூபாய் 1.94 கோடி செலவில் வழங்கப்படும்.

**47) சென்னை பெருநகர காவல் துறைக்கு புதிய திறந்தவெளி அணிவகுப்பு ஆய்வு ஈப்பு (Jeep) வழங்குதல்.**

குடியரசு தின விழா, சுதந்திர தின விழா, பதக்கம் வழங்கும் விழா உள்ளிட்ட விழாக்களின்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் மற்றும் மூத்த காவல்துறை அதிகாரிகள் காவல் அணிவகுப்பு அணிகளை ஆய்வு செய்ய புதிய திறந்தவெளி அணிவகுப்பு ஆய்வு ஈப்பு (Jeep) ரூபாய் 0.22 கோடி செலவில் வழங்கப்படும்.

**48) தானியங்கி பதிவு எண்ணை பதிவு செய்யும் கேமராக்கள் (ANPR) உட்பட வாகனங்களை எண்ணி வகைப்படுத்தும் தானியங்கி கருவிகள் (Automatic Traffic Counters and Classifiers –ATCC) நெடுஞ்சாலைகளில் பொருத்துதல்.**

வாகன இயக்கத்தை பகுப்பாய்வு செய்து, போக்குவரத்து நெரிசலை தடுக்க சிறப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும், நெடுஞ்சாலைகளில் முக்கிய சந்திப்புகளில் வாகனங்களை வகைப்படுத்தவும், தானியங்கி பதிவு எண்ணை பதிவு செய்யும் கேமராக்கள் (ANPR) மற்றும் வாகனங்களை எண்ணி வகைப்படுத்தும் தானியங்கி கருவிகள் (Automatic Traffic Counters and Classifiers – ATCC) ரூபாய் 5.00 கோடி செலவில் நெடுஞ்சாலைகளில் பொருத்தப்படும்.

**49) சென்னை மாநகரக் காவல் துறையிலுள்ள 12 மாவட்ட பேரிடர் மீட்புக் குழுக்கள் பயன்படுத்திடத் தேவையான புதிய கருவிகள் வாங்குதல்.**

2023 ம் ஆண்டு மிக்ஜாம் புயலின் போது, 12 சென்னை மாநகரக் காவல் மாவட்டங்களில் பெரும்பாலானவை மிகவும் பாதிக்கப்பட்டன. மாவட்ட பேரிடர் மீட்புக் குழுக்கள் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இக்குழுவிற்குத் தேவையான புதிய கருவிகள் ரூபாய் 5.90 கோடி செலவில் வாங்கப்படும்.

**50) ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரகங்களுக்கு தகவல் தொடர்பு கருவிகள் வாங்குதல்.**

ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரங்களில் களக் காவல் பணியின்போது சிறப்பான தடையற்ற தகவல் தொடர்பை உறுதி செய்ய 267 நிலையான மிக உயரலை (VHF Static) கருவிகள், 374 நடமாடும் மிக உயரலை (VHF Mobile) கருவிகள், தனி மின்கலன்களுடன்கூடிய 1,068 கையடக்க மிக உயரலை (VHF Handheld) கருவிகள் ஆகியவை ரூபாய் 10.60 கோடி செலவில் வாங்கப்படும்.

**51) அனைத்து காவல் நிலையங்களுக்கும் கலவரத்தை அடக்கப் பயன்படும் உபகரணங்கள் படிப்படியாக வழங்குதல்**

மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் உள்ள காவல் நிலையங்களுக்கு கலவரத்தை கட்டுப்படுத்தப் பயன்படும் உபகரணங்களான பாலி கார்பனெட் ஷீல்டு, உடல் பாதுகாப்பு கவசம், தலைக் கவசம், பாலி கார்பனெட் லத்தி ஆகியவை முதற்கட்டமாக இந்த ஆண்டு 4,000 எண்ணிக்கையில் வழங்கப்படும்.

**52) குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு நவீன புலனாய்வு உபகரணங்கள் வழங்குதல்.**

குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு மின்னணு சாதனங்கள், புலனாய்வு உபகரணங்கள் மற்றும், மென்பொருட்கள் வழங்கி, அவற்றை பயன்படுத்தி புலன் விசாரணையை துரிதப்படுத்தி மின்னணு முறையில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்ய, ரூபாய் 1.82 கோடி செலவில் தேவையான கருவிகள் வழங்கப்படும்.

**53) மெரினா கடற்கரை கண்காணிப்பு திட்டத்தினை செயல்படுத்துதல்.**

மெரினா கடற்கரையிலும், உட்புறச் சாலைகளிலும் உட்சுற்று கண்காணிப்பு கேமராக்கள் மூலம் குற்றச் செயலில் ஈடுபடுபவர்களையும், பண்டிகை காலங்களில் மக்கள் கூட்டத்தை கண்காணிக்கவும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மெரினா கடற்கரை கண்காணிப்பு திட்டம் ரூபாய் 4.64 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

**54) காவல் சுருக்கெழுத்துக் கூட அறிக்கையாளர்களுக்கு 136 மடிக் கணினிகள் வழங்குதல்.**

மாநில நுண்ணறிவுப் பிரிவின் பணிகளை செம்மைப்படுத்த ஏதுவாக காவல் சுருக்கெழுத்துக் கூட அறிக்கையாளர்கள் 136 பேருக்கு, தலா ஒரு மடிக் கணினி ஹெட் ஃபோனுடன் ரூபாய் 0.82 கோடி செலவில் வழங்கப்படும்.

**55) சென்னை பெருநகர காவலில் மாற்றுப் பாதை குறித்த தகவல் முறையை தெரிவிக்கும் அறிவிப்பு பலகைகள் வழங்குதல்.**

கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளும் போதும், சிறப்பு நிகழ்வுகளின்போதும் போக்குவரத்து நிர்வகிப்பை மேம்படுத்தும் பொருட்டு, வாகன ஓட்டிகளுக்கு மாற்றுப் பாதையில் செல்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்க அறிவிப்பு பலகைகள் ரூபாய் 0.24 கோடி செலவில் வழங்கப்படும்.

## V. புதிய பதவிகளை உருவாக்குதல்

**56) பொருளாதார குற்றப் பிரிவில் மேற்கு மண்டல காவல் கண்காணிப்பாளர் பதவி கூடுதலாக உருவாக்குதல்.**

மேற்கு மண்டல பொருளாதார குற்றப் பிரிவில் மற்ற மண்டலங்களைவிட அதிகமான பொருளாதார குற்ற வழக்குகள் பதியப்படுகின்றன. எனவே, கூடுதலாக காவல் கண்காணிப்பாளர் மேற்கு மண்டலம் என்ற பதவி ரூபாய் 0.52 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**57) திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவு பிரிவில் உள்ள ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவியை தரம் உயர்த்தி கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவி உருவாக்குதல்.**

திட்டமிட்ட குற்றம் தொடர்பான நடவடிக்கைகளை கண்காணிக்கவும், இப்பிரிவின் காவல் கண்காணிப்பாளருக்கு உதவுவதற்காகவும், திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் தலைமையகம் மற்றும் அலகுகளை கண்காணிக்கவும் ஒரு காவல் துணை கண்காணிப்பாளர் பதவி கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவியாக தரம் உயர்த்தப்படும்.

**58) சென்னை பெருநகர காவல் ஆணையரகத்திற்கு துணை ஆணையாளர், நலன் மற்றும் எஸ்டேட் பதவி புதிதாக உருவாக்குதல்.**

சென்னை பெருநகர காவல் வரம்பில், மொத்தம் 23,583 காவல் அதிகாரிகள் / ஆளிநர்கள் பணிபுரிகின்றனர். அவர்களின் குறைகளை களையவும், நலன் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், சென்னை பெருநகர காவல்துறைக்கு ஒரு காவல் துணை ஆணையாளர் நலன் மற்றும் எஸ்டேட் என்ற பதவி புதிதாக ரூபாய் 0.40 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**59) குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில் 5 சட்ட ஆலோசகர் பதவிகள் உருவாக்குதல்.**

குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில் பணியாற்றும் புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவி புரிந்திட காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு சட்ட ஆலோசகர் பதவி ரூபாய் 0.30 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**60) இணையதள குற்றங்களை புலனாய்வு செய்வதற்கு நிறுவன வல்லுநர்களை ஈடுபடுத்துதல்.**

இணையதள குற்றங்களை புலனாய்வு செய்ய உதவியாக தடய அறிவியல் ஆலோசகர், நிதி மோசடிகளை புலனாய்வு செய்பவர், சட்ட அலுவலர் உள்ளிட்ட நிறுவன வல்லுநர்கள் ரூபாய் 1.00 கோடி செலவில் ஈடுபடுத்தப்படுவர்

**61) சென்னை பெருநகர காவல் ஆணையரக அலுவலகத்தில் அரசு துணை செயலாளர் நிலையில் நிதி கட்டுப்பாட்டாளர் பதவி ஒன்று புதிதாக உருவாக்குதல்.**

சென்னை பெருநகர காவல் ஆணையரக அலுவலகத்தில் வரவு-செலவு பணிகள், அன்றாட நிதி தொடர்பான பணிகள் மற்றும் முறையான கணக்கு வழக்கு பராமரித்தல் போன்ற பணிகளை கண்காணிக்க, அரசு துணை செயலாளர் நிலையில் நிதி கட்டுப்பாட்டாளர் பதவி ஒன்று புதிதாக ரூபாய் 0.17 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**62) சென்னை பெருநகர காவலில் ஊர்க்காவல் படையின் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்**

சென்னை பெருநகர காவல் மூன்றாகப் பிரிக்கப்பட்ட பிறகு, ஆவடி ஆணையரகத்திற்கும், தாம்பரம் ஆணையரகத்திற்கும் தற்போதுள்ள ஊர்க்காவல் படையினர் பிரித்து வழங்கப்பட்டனர். இதன் காரணமாக, தற்போது, சென்னை மாநகர ஊர்க்காவல் படையினரின் மொத்த எண்ணிக்கை குறைந்துள்ளது. எனவே, ஒப்பளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையைவிட 500 புதிய ஊர்க்காவல் படையினர் சென்னை பெருநகர காவலில் பயன்படுத்தப்படுவர். இதற்காக ரூபாய் 1.79 கோடி செலவிடப்படும்.

**63) தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தில் ஒரு முதன்மை நிர்வாக அதிகாரி பணியிடம் உருவாக்குதல்.**

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தில் நிர்வாகப் பணிகளை திறம்பட மேற்கொள்ள, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் முதன்மை நிர்வாக அதிகாரி என்ற ஒரு பணியிடம் உருவாக்கப்படும்.

**64) தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் ஆளிநர்கள் பணியின் போது உயிரிழப்போ / உடல் ஊனமோ / காயமோ ஏற்பட்டால் வழங்கப்படும் கருணைத் தொகை உயர்த்தி வழங்கப்படுவதுடன், சிறப்பு இலக்குப் படையில் பணியாற்றும் ஆளிநர்களுக்கும் அத்தொகையை உயர்த்தி வழங்குதல்.**

தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் ஆளிநர்கள் மற்றும் சிறப்பு இலக்கு படை ஆளிநர்கள் பணியின்போது உயிரிழப்போ / உடல் ஊனமோ / காயமோ ஏற்பட்டால் வழங்கப்படும் கருணைத் தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும்.

| உயிரிழப்பு / காயத்தின் வகை | உயர்த்தப்படவுள்ள கருணைத் தொகை | |
|---|---|---|
| | அனைத்து காவல் ஆளிநர்கள் (சிறப்பு இலக்கு படை தவிர) | சிறப்பு இலக்கு படை ஆளிநர்கள் |
| பணியாற்றும் போது உயிரிழப்பு | 25 இலட்சம் | 30 இலட்சம் |
| இரண்டு கைகள் (அ) கால்கள் இழப்பு (ம) முற்றிலும் கண் பார்வை இழப்பு | 12 இலட்சம் | 15 இலட்சம் |
| ஒரு கை (அ) கால் இழப்பு (ம) ஒரு கண் பார்வை இழப்பு | 7.5 இலட்சம் | 10 இலட்சம் |
| தீக்காயம், குண்டடி காயம், பல்வகை எலும்பு முறிவு | 4.5 இலட்சம் | 7 இலட்சம் |
| கொடுங்காயம் (ம) எலும்பு முறிவு | 2 இலட்சம் | 3 இலட்சம் |
| சிறு காயம் (அனைத்து நிலை) | 50,000 | 1 இலட்சம் |

**65) காவல் கண்காணிப்பாளர்கள் (மாநில காவல் பணி), தளவாய்கள், துணை ஆணையாளர் (ஆயுதப் படை), காவல் கண்காணிப்பாளர் (தொழில்நுட்ப சேவைகள்) காவல் கண்காணிப்பாளர் (விரல்ரேகைப் பிரிவு), கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர்கள் (வகை–I, II, III) ஆகியோருக்கு சீருடைப்படி வழங்குதல்.**

காவல் கண்காணிப்பாளர்கள் (மாநில காவல் பணி), தளவாய்கள், துணை ஆணையாளர் (ஆயுதப் படை), காவல் கண்காணிப்பாளர் (தொழில்நுட்பத் சேவைகள்) காவல் கண்காணிப்பாளர் (விரல்ரேகைப் பிரிவு), கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு சீருடைப் படி ஆண்டுக்கு ரூபாய் 15,000/– ம், காவல் துணை கண்காணிப்பாளர்களுக்கு (வகை–I, II, III) சீருடைப் படி ஆண்டுக்கு ரூ.10,000/–ம் வழங்கப்படும். இதற்காக ரூபாய் 1.65 கோடி நிதி ஒதுக்கப்படும்.

**66) சிறப்புப் பிரிவுகளில் பணியாற்றும் காவல் ஆளிநர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்க கூட்டு நிதியம் உருவாக்குதல்.**

காவல் துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகளான மாநில குற்ற ஆவணக் காப்பகம், இணையவழி குற்றத் தடுப்புப் பிரிவு, சமூக ஊடகப் பிரிவு, பொருளாதார குற்றப் பிரிவு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு போன்றவற்றில் பணிபுரிபவர்களின் தொழில்நுட்பத் திறனை அதிகரிக்கவும், புதிதாக எழக்கூடிய டிஜிட்டல் சவால்களை சமாளிக்கவும், காவல்துறையின் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளை காவல் துறையினரே தனித்து மேற்கொள்ள சிறப்புப் பயிற்சி வழங்க ரூபாய் 5.00 கோடி செலவில் கூட்டு நிதியம் உருவாக்கப்படும்.

**67) ஊர்க்காவல் படையில் பணியாற்றும் ஆளிநர்கள் உயிரிழக்கும்போது அவர்கள் குடும்பத்திற்கு தமிழ்நாடு ஊர்க்காவல் படை நலன் மற்றும் கருணைக் கொடை நிதியிலிருந்து வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை அதிகரித்தல்.**

ஊர்க்காவல் படையில் பணியாற்றும் ஆளிநர்கள் உயிரிழந்தால் அவர்கள் குடும்பத்திற்கு தமிழ்நாடு ஊர்க்காவல் படை நலன் மற்றும் கருணைக் கொடை நிதியிலிருந்து இழப்பீடு ரூ.15,000/- மற்றும் காயமுற்றவர்களுக்கு நிதி ரூ.10,000/- வழங்கப்பட்டு வருகிறது. அதிகரித்து வரும் மருத்துவச் செலவு, போக்குவரத்து மற்றும் இதர செலவுகளை கருத்தில்கொண்டு இந்த இழப்பீட்டுத் தொகை உயிரிழப்புக்கு ரூ.15,000/-லிருந்து ரூ.1,00,000/- ஆகவும் காயமுற்றவர்களுக்கு ரூ.10,000/-லிருந்து ரூ.50,000/-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

**68) மதுரை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட காவல் அதிகாரிகள்/ ஆளிநர்களுக்கு "மகிழ்ச்சி" எனும் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.**

மன அழுத்தம் மற்றும் பிற பிரச்சனைகளின் காரணமாக பாதிக்கப்படும் காவல் ஆளிநர்களை மீண்டும் மக்களுக்கு சிறப்பாக சேவை செய்யும் வகையிலும், துறையின் பணிச்சூழலை மாற்றும் வகையிலும் முழுத் திறனுடன் பணியாற்ற வகை செய்ய மதுரை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பணியாற்றும் குறிப்பிட்ட காவல் அதிகாரிகள் / ஆளிநர்களுக்கு "மகிழ்ச்சி" எனும் உளவியல் சார்ந்த பயிற்சி வகுப்புகள் ரூபாய் 0.61 கோடி செலவில் நடத்தப்படும்.

**69) 'சென்னை – பெண்களுக்கான பாதுகாப்பான நகரம்' தொலைநோக்கு திட்டம் தயாரித்தல்.**

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) அறிக்கையின்படி, நாட்டிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான நகரங்களில் ஒன்றாக சென்னை மாநகரம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரத்தில் உள்ள பெண்களின் பாதுகாப்பினை முழுமையாக உறுதிசெய்திட தொலைநோக்கு திட்டம் (Vision document for Safe City – Chennai) தயாரிக்கப்படும்.

**70) சென்னை பெருநகர காவல்துறைக்கு புதிய இணைய முகப்பு (Citizen Portal) உருவாக்குதல்.**

பொதுமக்கள் சென்னை பெருநகர காவல் துறையை அணுகி பெறும் அனைத்து சேவைகளையும் இணையத்தின் மூலம் வழங்கிட புதிய இணைய முகப்பு (Citizen Portal) உருவாக்கப்படும்.

## 71) சென்னை பெருநகர காவலில் பள்ளி பாதுகாப்பு மண்டலங்கள் அமைக்கப்படும்

கல்வி நிறுவனங்களுக்கு அருகில் ஏற்படும் விபத்துகள் மற்றும் விபத்தால் ஏற்படும் அபாயங்களைப் பற்றியும் சாலை விதிகள் மற்றும் சாலைப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பள்ளி பாதுகாப்பு மண்டலங்கள் ரூபாய் 1.00 கோடி செலவில் அமைக்கப்படும்.

## VIII. பொதுமக்கள் – தனியார் பங்களிப்பு திட்டம்

**72) கோயம்புத்தூர் மாநகராட்சியை விபத்தில்லா மாநகரமாக மாற்றுவதற்கான திட்டத்தினை செயல்படுத்துதல்.**

மாநிலத்தில், சாலை விபத்துகளை குறைத்திட அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கோயம்புத்தூர் மாநகராட்சியை விபத்தில்லா மாநகரமாக மாற்றுவதற்கான செயல்திட்டத்தினை கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள உயிர் அறக்கட்டளை என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து அரசு ரூபாய் 5.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தும்.

**73) அரசு மற்றும் தனியார் நிதி உதவி மூலம் மாநிலம் முழுவதும் பொருத்தப்பட்ட உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்களின் பராமரிப்புச் செலவிற்கு நிதி ஒதுக்குதல்.**

அரசு மற்றும் தனியார் நிதி உதவி மூலம் மாநிலம் முழுவதும் பொருத்தப்பட்டுள்ள உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்களின் பராமரிப்புச் செலவிற்கு ரூபாய் 5.00 கோடி நிதி ஒதுக்கப்படும்.

## IX. பல்வகை

### 74) மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களில் போதைப் பொருட்களை கண்டறிய 35 மோப்ப நாய்கள் வாங்குதல்.

போதைப் பொருட்கள் கடத்தலை தடுக்கவும், போதை மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்படுவதாலும் போதைப் பொருட்களை கண்டறிய நாகப்பட்டினம், வேலூர், திருப்பூர் நகரம், திருநெல்வேலி நகரம், நாமக்கல், தஞ்சாவூர், திண்டுக்கல், தர்மபுரி, ஆவடி நகரம், திருவண்ணாமலை, விழுப்புரம், காஞ்சிபுரம், திருப்பூர், சேலம் நகரம், கடலூர், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், திருச்சி, அரியலூர், திருவாரூர், திருச்சி நகரம், மதுரை, சேலம், திருவள்ளூர், ஈரோடு, நீலகிரி, கரூர், சிவகங்கை, பெரம்பலூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய மாநகரங்கள் / மாவட்டங்களில் தலா ஒரு மோப்ப நாயும், மதுரை மாநகரம் மற்றும் தேனி மாவட்டத்தில் கூடுதலாக தலா ஒரு மோப்ப நாயும், ஆக மொத்தம் 35 மோப்ப நாய்கள் ரூபாய் 0.53 கோடி செலவில் வாங்கப்படும்.

**75) இணையதள குற்றம், பொருளாதார குற்றம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், போதைப் பொருள் மற்றும் சாலை பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.**

இணையதள குற்றம், பொருளாதார குற்றம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், போதைப் பொருள் மற்றும் சாலை பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து மாநிலம் முழுவதும் இணையதள மாநாடுகள் மற்றும் ஹேக்கத்தான் (Hackathon) நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்

**76) புவியியல் தகவல் முறைமை அடிப்படையில், குற்ற நிகழ்விடங்களை வரைபடமிடும் திட்டம் மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்படும்.**

புவியியல் தகவல் முறைமை அடிப்படையில் குற்றங்கள் மற்றும் குற்ற நிகழ்விடங்களை ஆய்வு செய்யும் திட்டம் தற்போது சென்னை மாநகர காவலில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் இனி மாநிலம் முழுவதும் தமிழ்நாடு காவல்துறைக்காக தமிழ்நாடு மின்ஆளுமை முகமை மூலம் விரிவுபடுத்தப்படும்.

# தடய அறிவியல் துறை

**77) தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் புதிதாக ஆயப் பிரிவு உருவாக்குதல்.**

புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் இருந்து சென்னை மற்றும் கோயம்புத்தூர் தடய அறிவியல் ஆய்வகங்களுக்கு அனுப்பப்பட்டு வரும் ஆயப்பிரிவு தொடர்பான மாதிரிகளை ஆய்வு செய்வதற்காக புதிதாக ஒரு ஆயப்பிரிவு தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ரூபாய் 5.21 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**78) சென்னை தடய அறிவியல் துறையில் முதன்மை ஆய்வகத்தில் உள்ள நஞ்சியல் பிரிவிற்கென தானியங்கி பயோ–சிப் அரே அனலைசர் (Automated Bio-Chip Array Analyzer) ஒன்று வழங்குதல்.**

தடய அறிவியல் துறையில் ஆய்வுக்காக பெறப்படும் உயிரியல் மாதிரிகளில் உள்ள மருந்துகளை எளிதில் பிரிப்பதற்கு ஏதுவாக புதிதாக தானியங்கி பயோ–சிப் அரே அனலைசர் **(Automated Bio-Chip Array Analyzer)** சென்னையில் உள்ள முதன்மை ஆய்வகத்தின் நஞ்சியல் பிரிவிற்கென ரூபாய் 1.02 கோடி செலவில் வழங்கப்படும்.

**79) தடய அறிவியல் துறையின் சென்னை முதன்மை ஆய்வகத்திற்கு மூன்றும், திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர், தர்மபுரி மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள ஆறு வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களுக்கு தலா ஒன்று வீதம் ஒன்பது மேம்பட்ட / அதிநவீன உயிர் மாதிரி சேமிப்பு வசதிகள் (Advanced/ Sophisticated Bio-Specimen Storage Facility) நிறுவுதல்.**

தடய அறிவியல் ஆய்விற்கென பெறப்படும் உயிர் மாதிரிகளை முறையான வெப்பநிலையில் பாதுகாத்து வைப்பது இன்றியமையாததாகும். இதற்கென சென்னையில் உள்ள முதன்மை ஆய்வகத்திற்கு மூன்றும் மற்றும் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர், தர்மபுரி , மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களுக்கு தலா ஒன்று வீதம் ஒன்பது மேம்பட்ட / அதிநவீன உயிர் மாதிரிகள் சேமிப்பு வசதிகள் (Advanced/ Sophisticated Bio–Specimen Storage Facility) ரூபாய் 2.88 கோடி செலவில் வழங்கப்படும்

**80) முதன்மை ஆய்வகம், சென்னை தடய அறிவியல் துறை மற்றும் ஏழு வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் நிறுவுதல்.**

தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து வெளியேற்றப்படும் உயிரியல் மற்றும் வேதியியல் கழிவுகளினால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசினை தவிர்க்கும் பொருட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் சென்னையில் உள்ள முதன்மை ஆய்வகம் மற்றும் 7 வட்டார தடயஅறிவியல் ஆய்வகங்களில் ரூபாய் 90.00 லட்சம் செலவில் நிறுவப்படும்.

**81) தடய அறிவியல் துறையின் ஒட்டுமொத்த நிர்வாக பணிகளை மேம்படுத்த, ஒரு முதன்மை நிர்வாக அலுவலர் (Chief Administrative Officer) பணியிடம் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உருவாக்கப்படும்.**

தற்போது தடய அறிவியல் துறையின் நிர்வாகமானது, அத்துறையில் உள்ள அறிவியல் பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுவதால் அவர்கள் அறிவியல் பணியுடன் நிர்வாகப் பணியையும் கூடுதலாக மேற்கொள்ளும் நிலை உள்ளது. தடய அறிவியல் துறையின் நிர்வாகத்தை மேம்படுத்த ஒரு முதன்மை நிர்வாக அலுவலர் (Chief Administrative Officer), பணியிடம் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உருவாக்கப்பட்டு அப்பணியிடம் அயற்பணியில் நிரப்பப்படும்.

# தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

## I. புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் நிறுவுதல்

**82) ஏழு இடங்களில் புதியதீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் நிறுவுதல்.**

தூத்துக்குடி மாவட்டம் – ஏரல், கோயம்புத்தூர் மாவட்டம் – கருமத்தம்பட்டி, திருப்பூர் மாவட்டம் – மடத்துக்குளம், செங்கல்பட்டு மாவட்டம் – கோவளம், காஞ்சிபுரம் மாவட்டம் – படப்பை, திருநெல்வேலி மாவட்டம் – திருநெல்வேலி மாநகரம், சிவகங்கை மாவட்டம் – புதுவயல் ஆகிய ஏழு இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் நிறுவப்படும்

## II. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்.

**83) சமயபுரம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

சமயபுரம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்.

**84) மேடவாக்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

மேடவாக்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்.

**85) பெரம்பலூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

பெரம்பலூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்.

**86) கொளத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

கொளத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்.

**87) தியாகதுருகம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

தியாகதுருகம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு அனைத்து

உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்.

**88) திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும.

## III. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்

**89) கீழ்க்கண்ட 3 இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பணியாளர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டுதல்.**

1. சிவகங்கையில் 2 நிலைய அலுவலர் மற்றும் 16 பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படும்.

2. பீளமேடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வளாகத்தில் 15 பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படும்.

3. திருச்செங்கோடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலைய வளாகத்தில் 2 நிலைய அலுவலர் மற்றும் 12 பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படும்.

## IV. தீயணைப்பு பணியாளர்கள் தங்குமிடம் (Dormitories)

**90) கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப் பாளையத்தில் படைக் குடியிருப்பு (Dormitory) மற்றும் மண்டல பயிற்சி மையம் அமைத்தல்.**

நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகிய மீட்புப்பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் 50 மீட்புப்

பணியாளர்கள் தங்குவதற்கு படை குடியிருப்பு மற்றும் மண்டல பயிற்சி மையம் அமைக்கப்படும்.

## V. புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்

**91) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களின் பயன்பாட்டிற்காக 50 நீர்தாங்கி வண்டிகள் (Water Tenders) வழங்குதல்.**

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளை மேற்கொள்வதற்கான அடிப்படைத் தேவையாக கருதப்படுவது நீர்தாங்கி வண்டிகளாகும். இவற்றின் தேவையைக் கருத்திற்கொண்டு 50 புதிய நீர்தாங்கி வண்டிகள் (Water Tenders) மொத்தம் ரூபாய் 37.50 கோடி செலவினத்தில் வழங்கப்படும்.

**92) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பயன்பாட்டிற்கு புதியதாக 3 நுரை தகர்வு நீர்தாங்கி ஊர்திகள் (Foam Tenders) வழங்குதல்.**

இரசாயனம் எண்ணெய் தொழிற்சாலைகள் மற்றும் மின்மாற்றி ஆகியவற்றால் ஏற்படும் தீயினை எதிர்த்து போராட நுரை தகர்வு வாகனங்கள் அத்தியாவசியமாகும். எனவே, இத்துறையின் பயன்பாட்டிற்காக 3 நுரை தகர்வு நீர்தாங்கி ஊர்திகள் (Foam Tenders) ரூபாய் 2.40 கோடி செலவினத்தில் வழங்கப்படும்.

**93) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பயன்பாட்டிற்கு புதியதாக 5 அவசரகால மீட்பு ஊர்திகள் (Emergency Rescue Tender) வழங்குதல்.**

பெரிய தீ விபத்துக்கள், சாலை விபத்துக்கள், கட்டட இடிபாடுகள், வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளின் போது மீட்புப்பணிகளை திறம்பட மேற்கொள்ள அவசரகால மீட்பு ஊர்திகள் (Emergency

Rescue Tender) பயன்படுத்தப்படுகிறது. எனவே, இத்துறையின் பயன்பாட்டிற்காக 5 அவசரகால மீட்பு ஊர்திகள் ரூபாய் 5.50 கோடி செலவினத்தில் வழங்கப்படும்.

**94) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் உதவி மாவட்ட அலுவலர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக புதியதாக 10 ஈப்புகள் வழங்குதல்.**

அவசர காலங்களில் முதன்மை பொறுப்பாளர்களாக பணிபுரியும் அலுவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல ஏதுவாக தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் உதவி மாவட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக புதியதாக 10 ஈப்புகள் (Jeeps) ரூபாய் 90.00 இலட்சம் செலவினத்தில் வழங்கப்படும்.

**95) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் நிலைய அலுவலர்களின் பயன்பாட்டிற்கென புதியதாக 50 இருசக்கர வாகனங்கள் வழங்குதல்.**

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலைய அலுவலர்கள் ஆய்வு பணிகளை திறம்பட மேற்கொள்வதற்காக புதியதாக 50 இருசக்கர வாகனங்கள் ரூபாய் 55.00 இலட்சம் செலவினத்தில் வழங்கப்படும்.

**96) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளில் ஈடுபடும் பணியாளர்களின் பயன்பாட்டிற்காக 1500 தற்காப்பு உடைகள் (Personal Protective Equipment) வழங்குதல்.**

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளில் ஈடுபடும் பணியாளர்களின் பயன்பாட்டிற்காக 1500 தற்காப்பு உடைகள் (Personal Protective Equipment) வழங்குதல்.

அனைத்து தீயணைப்பு வீரர்களுக்கும்

தீயிலிருந்து பாதுகாக்கும் தற்காப்பு உடைகள் (Personal Protective Equipment) வழங்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 11.25 கோடி செலவினத்தில் 1500 தற்காப்பு உடைகள் வழங்கப்படும்.

**97) மீட்புப்பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு சிறிய உபகரணங்களுடன் கூடிய 3000 மீட்பு உடைகள் (Rescue Dress with Small Gears) வழங்குதல்.**

தீயணைப்பு பணியாளர்கள் மீட்புப்பணியின் போது இடர்பாடுகளில் துரிதமாகவும், திறம்படவும் செயல்பட, பாதுகாப்பு உபகரணங்களுடன் கூடிய 3000 மீட்பு உடைகள் ரூபாய் 4.50 கோடி செலவினத்தில் வழங்கப்படும்.

**98) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளின் போது பயன்படுத்துவதற்கு 453 மூச்சுக்கருவிகள் (Breathing Apparatus Sets) வழங்குதல்.**

தீயணைப்பு பணிகளின் போது புகையால் ஏற்படும் மூச்சு திணறலிலிருந்தும், நச்சு

வாயுவை சுவாசிப்பதிலிருந்தும் பாதுகாத்து கொள்ள, மூச்சுக்கருவிகள் இன்றியமையாத பாதுகாப்பு உபகரணமாகும். எனவே, தீயணைப்பு பணியாளர்களது பயன்பாட்டிற்கு 453 மூச்சுக் கருவிகள் ரூபாய் 6.34 கோடி செலவினத்தில் வழங்கப்படும்.

## VI. பயிற்சிகள்

**99) வெள்ளம் மற்றும் பேரிடர் மீட்புப்பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறையின் பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்.**

ஒவ்வொரு ஆண்டும் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்கள் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படுகிறது. இச்சவால்களை திறம்பட எதிர்கொள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின்

பணியாளர்களுக்கு கடலோர மீட்பு பயிற்சி, சிறப்பு உபகரணங்களை இயக்குவதற்கான பயிற்சி மற்றும் பணியாளர்களின் திறனை மேம்படுத்த தேவையான இணையவழி வளங்கள் மற்றும் புத்தகங்களை கொள்முதல் செய்வதற்கு ரூபாய் 50.00 இலட்சம் வழங்கப்படும்.

## VI. நிதி அதிகாரங்களை உயர்த்தி வழங்குதல்

**100.) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மோப்ப நாய் படைப் பிரிவில் உள்ள மோப்ப நாய்களுக்கு உணவு, நோய்தடுப்பு மற்றும் பராமரிப்பு கட்டணத்தை உயர்த்தி வழங்குதல்.**

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மோப்ப நாய் படைப் பிரிவில் உள்ள மோப்ப நாய்களுக்கு உணவு, நோய்தடுப்பு மற்றும் பராமரிப்பு கட்டணத்தை ரூபாய் 3.41 இலட்சம் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்படும்.

**மு.க. ஸ்டாலின்**
முதலமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.